தேதி - 04.02.2026.

**Pro**.**OP**.15/2024

**Rw**.1 - திருமதி. பாப்பம்மாள்

சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு சத்தியபிரமாணம் செய்யப்பட்டார். 2 ம் எதிர்மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை இல்லை.

**மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை**

சுப்பாரெட்டியாரும், குருசாமி ரெட்டியாரும் அண்ணன், தம்பி. சுப்பாரெட்டியாரின் மகன் ராமச்சந்திர கென்னடி. குருசாமி ரெட்டியாருடைய மகள் பரிமளம். ராமச்சந்திர கென்னடி எனது கணவர். மனுதாரர், பரிமளத்தின் மகன் ஆவார். குருசாமி ரெட்டியாரின் மனைவி பெயர் கோதையம்மாள். சுப்பாரெட்டியின் மனைவி சீதையம்மாள். சீதையம்மாளும், கோதையம்மாளும் உடன் பிறந்தவர்கள். இறந்துபோன ராமச்சந்திர கென்னடிக்கு நான் 2 வது மனைவி. ராமச்சந்திர கென்னடி முதல் மனைவியை விவாகரத்து செய்த பிறகு நான் ராமச்சந்திர கென்னடியை திருமணம் செய்தேன். 1989-ம் வருடம் டிசம்பர் மாதம் 8 ம் தேதி எனக்கும், ராமச்சந்திர கென்னடிக்கும் திருமணம் நடைபெற்றது. ராமச்சந்திர கென்னடிக்கும் அவரது முதல் மனைவி சாந்தாவுக்கும் குழந்தை எதுவும் இல்லை. ராமச்சந்திர கென்னடிக்கும் எனக்கும் குழந்தை எதுவும் இல்லை. 1989 முதல் 1991 வரை தான் நான் ராமச்சந்திர கென்னடியுடன் சேர்ந்து வாழ்ந்தேன் என்று சொன்னால் அது சரியல்ல. ராமச்சந்திர கென்னடி இறப்பதற்கு முன் சுமார் 5 - 6 வருடம் நானும், ராமச்சந்திர கென்னடி -யும் பிரிந்து வாழ்ந்து வந்தோம். 2004 ம் வருடம்

ராமச்சந்திர கென்னடி நோய் வாய்பட்டிருந்தார் என்று சொன்னால் அது சரிதான். அவர் அது சம்பந்தமாக சிகிச்சை எடுத்து வந்தார். நான் அந்த சமயத்தில் அவருடன் இருந்து ஒத்தாசை செய்யவில்லை என்று சொன்னால் அது சரியல்ல. நான் அவருடன் இருந்தேன். ராமச்சந்திர கென்னடி பொது வாழ்க்கையில் ஈடுபட்டு கடன் பெற்றிருந்தார் என்று சொன்னால் அவருக்கு கடன் இருந்தது. (ஒரு சொத்தை விற்று அந்த கடனை அடைத்துவிட்டதாக சாட்சி கூறுகிறார்). பரிமளத்தின் சகோதரர் சுப்புராஜ், ராமச்சந்திர கென்னடி மீது பாக வழக்கு அசல் வழக்கு எண்.437/2004 -ஐ மதுரை, மாவட்ட விரைவு நீதிமன்றத்தில் தாக்கல் செய்திருந்தார். அந்த வழக்கு பின்னிட்டு 1வது கூடுதல் மாவட்ட நீதிமன்றத்திற்கு மாறுதலாகி OS.No.1001/1990 என நடந்து வந்தது என்று சொன்னால் அது சரிதான். அதில் IA.No.117/1995 ல் சமரச மனு தாக்கல் செய்யப்பட்டது என்று சொன்னால் அது சரிதான். அதில் A schedule சொத்து சுப்புராஜ்க்கும், B schedule சொத்து ராமச்சந்திர கென்னடிக்கும் ஒதுக்கப்பட்டது என்று சொன்னால் அதுபற்றி எனக்கு தெரியாது. மேற்படி சமரச தீர்ப்பை எதிர்த்து சுப்புராஜ் மாண்புமிகு சென்னை உயர்நீதிமன்றம் மதுரை கிளையில் AS.No.56/2010 நிலுவையில் இருந்து வருகிறது என்று சொன்னால் அது சரிதான். ராமச்சந்திர கென்னடி 06.02.2011ம் தேதி இறந்துவிட்டார். ராமச்சந்திர கென்னடி 04.03.2007 ல் அவருக்கு பாத்தியப்பட்ட சொத்துக்களை மனுதாரருக்கு உயில் எழுதி வைத்துவிட்டார் என்று சொன்னால் அதுபற்றி எனக்கு தெரியாது. AS.No.56/2010 வழக்கில் 44 பிரதிவாதியாக ராமச்சந்திர கென்னடி -யின் வாரிசாக

நான் சேர்க்கப்பட்டுள்ளேன் என்று சொன்னால் அது சரிதான். மேற்படி உயில் பற்றிய விபரம் ராமச்சந்திர கென்னடி இறந்து சுமார் ஒரு மாதம் கழித்து எனக்கு தெரிய வந்தது. அந்த உயிலை எதிர்த்து நான் வழக்கு எதுவும் போடவில்லை. உயர்நீதிமன்றத்தில் என் சார்பாக வழக்கு நடத்த வழக்கறிஞர் திரு.வெள்ளைச்சாமி என்பவரை நியமித்திருந்தார். அவரிடம் உயில் பற்றிய விபரத்தை நான் சொல்லவில்லை. உயில்படி மனுச்சொத்து மனுதாரருக்கு பாத்தியப்பட்டது என்று சொன்னால் அதை எப்படி என்னால் ஒத்துக்கொள்ள முடியும். பின்னர் உயில் சம்பந்தமாக பஞ்சாயத்து நடைபெற்றது என்று சொன்னால் நான் பேசவில்லை. என்னிடம் காட்டப்படும் ம.சா.ஆ.7 ஆவணத்தில் உள்ள கையெழுத்து என்னுடையது தான். பத்திர பதிவு அலுவலகத்தில் வைத்து தான் அந்த கையெழுத்தை போட்டேன். ஜீவனாம்சம் சம்பந்தமாக பஞ்சாயத்து பேசப்பட்டது என்று சொன்னால் அது சரிதான். நான் 60 - 70 லட்சம் ஜீவனாம்சமாக கேட்டேன். மனுதாரர் 29 லட்சம் தருவதாக சொன்னார். 2017 வாக்கில் மனுதாரரிடமிருந்து நான் 29 லட்சம் பெற்றுக்கொண்டேன். வழக்கிற்காக தற்போது உயில் பொய்யானது என மறுத்து வருகிறேன் என்று சொன்னால் அது சரியல்ல. ராமச்சந்திர கென்னடியுடன் இருந்து மனுதாரர் காந்தி மருத்துவம் செய்து மருத்துவ செலவுகளையும் செய்து வந்தார் என்று சொன்னால் அது சரிதான். ராமச்சந்திர கென்னடி உயிருடன் இருந்தபோது அவருடைய சில சொத்துக்களை விற்று நிறைய கடன்களை அடைத்தார் என்று சொன்னால் ஒரே ஒரு சொத்தை தான் விற்றார். மனுதாரரை மோசடி செய்ய

வேண்டும் என்ற எண்ணத்தில் AS.No.56/2010 வழக்கில் நானும், சுப்புராஜ் வகையறாவும் சமரச மையத்தில் ஒப்புக்கொண்டுள்ளோம் என்று சொன்னால் அது சரியல்ல. அந்த வழக்கில் மனுதாரர் தரப்பினராக சேர்ந்தபோது Probate பெற்றுவரும்படி உயர்நீதிமன்றத்தில் உத்தரவிடப்பட்டிருந்தது என்று சொன்னால் அதுபற்றி எனக்கு தெரியாது. 2007 லிருந்து 2011 வரை ராமச்சந்திர கென்னடி நல்ல மனநிலையுடன் இருந்தார் என்று சொன்னால் அவருக்கு sugar இருந்தது. கண் தெரியாமல் இருந்தது. அப்போது சுயநினைவுடன் இருந்தாரா என்று நான் பார்க்கவில்லை. நான் ராமச்சந்திர கென்னடிக்கு எந்த பணிவிடையும் செய்யவில்லை என்றும், அதுபற்றி ராமச்சந்திர கென்னடி உயிலில் குறிப்பிட்டிருந்தார் என்று சொன்னால் அது சரியல்ல. அவ்வாறு குறிப்பிட்டுள்ளதை என்னால் ஒப்புக்கொள்ளமுடியவில்லை. காந்தி மட்டுமே ராமச்சந்திர கென்னடி ஐ கவனித்து வந்தார் என்று சொன்னால் அது சரியல்ல. உடன் பலர் இருந்தார்கள். காந்தி செலவு செய்தார். என்னுடைய சகோதரர் RDO ஆக பணியாற்றி ஓய்வு பெற்றுள்ளார். ம.சா.ஆ.7 உறுதிமொழி பத்திரத்தில் என் சகோதரரும் சாட்சி கையெழுத்து போட்டுள்ளார். உயில் உண்மையானது என்று சொன்னால் அதை என்னால் நம்ப முடியாது. அதை சுயநினைவுடன் இரண்டு சாட்சிகள் முன்னிலையில் ராமச்சந்திர கென்னடி எழுதி வைத்துள்ளார் என்று சொன்னால் அதுபற்றி எனக்கு தெரியாது. சுப்புராஜ் உடன் கூட்டு சேர்ந்து கொண்டு சொத்தை அபகரிக்க வேண்டும் என்று பொய்யாக எதிர்வாதம் செய்து வருகிறேன் என்று சொன்னால் அது சரியல்ல. எனது

நிரூபணவாக்குமூலத்தில் கூறப்பட்டுள்ள சங்கதிகள் பொய்யானது என்று சொன்னால் அது சரியல்ல.

Sd/- பாப்பம்மாள்

திறந்த நீதிமன்றத்தில் என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு "சரி" என்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

MUTHUKUMARAN Digitally signed by MUTHUKUMARAN Date: 2026.02.04 19:08:49 +0530

முதலாவது கூடுதல் மாவட்ட நீதிபதி,
மதுரை.